NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p1
**Date:** 14 August 2021

### தொலைதூர வேலை ஏற்பாடு அதிகமாகும் சூழலில் துணைப் பிரதமர் விளக்கம்

# உலகளாவிய போட்டியை உள்ளூர் மக்கள் தவிர்த்துக்கொள்ள இயலாது

உலகளாவிய போட்டி அதிகமாகி வருகிறது. கொவிட்-19 காரணமாக தொலைவில் இருந்து வேலை பார்க்கும் நடைமுறை கூடி வருவதால், அந்தப் போட்டியில் இருந்து சிங்கப்பூரர்களை அரண் அமைத்து பாதுகாப்பது நடைமுறை சாத்தியமானதல்ல என்று துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட் தெரிவித்தார்.

ஆசியாவில் மட்டும் வரும் ஆண்டுகளில் மில்லியன் கணக்கான பல்கலைக்கழக பட்டதாரிகள் உலகளவில் ஆற்றல் மிக்கவர்களாகத் திகழ்வார்கள். அதே வேளையில், தொழில்நுட்ப மாற்றங்களும் இடம்பெறும். தொழில்துறை உருமாற்றம் காரணமாக வேலை பாணிகளும் மாறும் என்று அவர் விளக்கினார்.

இத்தகைய சூழலில் அனைத்துலகப் போட்டிகளில் இருந்து சிங்கப்பூர் ஊழியர்களைப் பாதுகாப்பது என்பது நடைமுறை சாத்தியம் இல்லை என்றார் அவர்.

"தொலைவில் இருந்து வேலை பார்க்கும் ஏற்பாடு காரணமாக முதலாளிகள் உலகின் எந்த பகுதியில் இருந்தும் அதிக தேர்ச்சிமிக்க ஊழியர்களை எளிதாகக் கண்டுபிடித்துவிட முடியும்.

"அதாவது, நம்முடன் போட்டியிட வெளிநாட்டினர் சிங்கப்பூரில் இருக்க வேண்டும் என்ற அவசியம் இராது. பூகோள ரீதியில் வாய்ப்புகளை ஒடுக்குவது மிகவும் சிரமமாகிவிடும்," என்றாரவர்.

சிங்கப்பூரின் எதிர்காலத்திற்கு உருகொடுப்பது பற்றிய கருத்தரங்கு ஒன்றில் திரு ஹெங்கின் உரை ஒளிபரப்பப்பட்டது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் 115வது ஆண்டைக் கொண்டாடும் வகையில் அந்தக் கருத்தரங்குத் தொடருக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

பிறகு திரு ஹெங், அந்தப் பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்களுடன் மெய்நிகர் கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

உலகளவிலான வேலை சந்தைக்குத் தயாராக மாணவர்கள் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்குப் பதிலளித்த துணைப் பிரதமர், அது நம்பிக்கை, தன்னடக்கம், திறந்தநிலை ஆகியவற்றை உள்ளடக்கிய மனப்போக்கை கொண்டிருப்பதைப் பொறுத்து இருக்கும் என்றார்.

நம்பிக்கை முக்கியம். அதோடு மற்றவர்களுடன் சேர்ந்து வேலை பார்க்க ஏதுவாக தன்னடக்கமும் அவசியம் என்று குறிப்பிட்ட திரு ஹெங், நமது வழிதான் தலைசிறந்த வழி என்று எப்போதுமே நாம் கருதக் கூடாது என்றார்.

சிங்கப்பூரின் முதல் தலைமுறை தலைவர்கள் புத்தாக்கத்துடன் நாட்டின் சொந்த வழியை பேணி உருவாக்கியதை முன்னதாக திரு ஹெங் சுட்டிக்காட்டினார்.

"உலகிற்குத் தன் கதவுகளை சிங்கப்பூர் திறந்து வைத்து இருக்கிறது. இதுவே அதன் பொதுவான இயல்பாக இருந்து வந்துள்ளது. "தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு தனித்து இருந்திருந்தால் சிங்கப்பூர் வெற்றி பெற்றிருக்க முடியாது," என்று துணைப் பிரதமர் தெரிவித்தார்.

பக்கம் 4ல் மேலும் செய்தி

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.

NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 14 August 2021

# ‘இன, மத வேறுபாடுகளை அடக்கமாகக் கையாளுங்கள்’

தங்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகளை அடக்கத்துடன் பொறுமையாகவும் அன்பாகவும் கையாளும் ஆற்றல்தான் சிங்கப்பூரின் ஒற்றுமைக்கு வலு சேர்ப்பதாகத் துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட் கூறியுள்ளார். அதுவே சிங்கப்பூரின் பெரும் பலங்களில் ஒன்று என்றும் திரு ஹெங் சொன்னார்.

குறிப்பாக மக்களின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய இனம், மதம் சார்ந்த விவகாரங்களைப் பற்றிப் பேசும்போது இந்த அம்சம் பொருந்தும் என்பதை அவர் சுட்டினார்.

“இத்தகைய விவகாரங்களைப் பொறுத்தவரை நமக்கு மாறுபட்ட கருத்துகள் இருப்பதோடு அவற்றைக் கையாள வெவ்வேறு அணுகுமுறைகள் இருக்கும் என்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும்,” என்று சிங்கப்பூரின் வருங்காலத்தை வடிவமைப்பதன் தொடர்பில் தேசியப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் திரு ஹெங் சொன்னார்.



தேசிய பல்கலைக் கழக மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோருடன் துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட் கலந்துரையாடினார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

தங்களிடம் இருக்கக்கூடிய பாரபட்சமான கருத்துகளையும் இனம் போன்ற விவகாரங்களின் தொடர்பில் தவறவிடக்கூடிய அம்சங்களையும் கண்டறிந்து அவற்றைத் திருத்திக்கொள்ள அடக்கமாக இருக்குமாறு அவர் சிங்கப்பூரர்களைக் கேட்டுக் கொண்டார்.

இத்தகைய விவகாரங்களைப் பற்றிப் பிறருடன் பேசும்போது மக்கள் பொறுமையாகவும் ஒருவருக்கொருவர் அன்பாகவும் நடந்துகொள்ளவேண்டும் என்று அவர் கூறினார்.

“ஒரே கருத்தை வலியுறுத்திச் சொல்வதால் முன்னேற்றம் காணமுடியாது. அதற்குப் பதிலாகப் பல்வேறு கோணங்களை ஆராய்ந்து அவற்றை ஒன்றுசேர்ப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கவேண்டும்,” என்றார் அவர்.

அண்மையில் நிகழ்ந்த சில சம்பவங்களால் சிங்கப்பூரின் இன நல்லிணக்கம் தொடர்பில் அதிகமாகப் பேசப்பட்டதைச் சுட்டிய துணைப் பிரதமர், இந்த அம்சத்தில் சமூகமாக இன்னும் சிறந்து விளங்க சிங்கப்பூரர்கள் எண்ணம் கொண்டுள்ளதாகச் சொன்னார்.

சுதந்திரமடைந்த காலத்தில் சிங்கப்பூர் எதிர்கொண்ட குழப்பங்களைப் பார்க்காத இளையர்கள் பொதுவாக நல்ல கல்வியைப் பெற்றவர்கள் என்றும் உலக நிகழ்வுகளையும் போக்குகளையும் நன்கு அறிந்தவர்கள் என்றும் திரு ஹெங் குறிப்பிட்டார். அவர்கள் பொதுவாக இனம், மதம் சார்ந்த கருத்துகளை வெளிப்படையாகத் தெரியப்படுத்தத் தயங்குவதில்லை என்றும் அவர் கூறினார். குறிப்பாக சமூக வலைத்தளங்களில் அவர்கள் கருத்துகளை அதிகமாகத் தெரிவிப்பதை அவர் சுட்டினார்.

“நாம் இதுவரை கட்டிக்காத்துவரும் ஒற்றுமை உணர்வு உங்களுக்குக் கைகொடுக்கும் என்று நம்புகிறேன்,” என்றார் திரு ஹெங்.

இதுபோன்ற விவகாரங்களை, தொடர்ந்து அடக்கத்துடன் பொறுமையாகவும் அன்பாகவும் அணுகினால் இளையர்களால் சிங்கப்பூரின் ஒற்றுமை உணர்வை மேலும் வளர்க்கமுடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளதாகத் திரு ஹெங் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.